FIRST INFORMATION REPORT

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORMS

UNDER SECTION 173 BNSS முதல் தகவல் அறிக்கை

(Under Section 154 Cr.P.C.)

BNSS பிரிவு 173-ன் கீழ்

(Cr.P.C. பிரிவு 154 இன் கீழ்)

C 8081622

02/AC/2025

1. District மாவட்டம் கரூர் PS காவல்நிலையம் அ.த.க. பரிசல் Year ஆண்டு 2025 FIR No முத.அ. எண் Date நாள் 23.07.2025

2. (i) Act சட்டம் PREVENTION OF CORRUPTION ACT 1988 [AS AMENDED IN 2018] Sections பிரிவுகள்

(ii) Act சட்டம் Sections பிரிவுகள் 7(a)

(iii) Act சட்டம் Sections பிரிவுகள்

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 22.07.2025 Date to : நாள் வரை மதியம் சுமார் 2.15 மணி

Time Period நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 23.07.2025 Time : நேரம் 07.00 HRS

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 23.07.2025 Time : நேரம்

4. Type of Information Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக கணினியில் டைபி தைய்த புகார்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சுமார் 40.கி.மீ. தெற்கு

Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி கடவூர் தாசில்தார் அலுவலக அறை.

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையிட்டாள்/ தகவல் தந்தவர் பெயர் V. ரேவதி (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் வேல்முருகன்

(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு வயது 39 (d) Nationality : நாட்டினம் இந்தியன் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : தொழில் கூலி வேலை (g) Address : முகவரி க.எண். 06/907. MPC நகர் தீர்த்தகிரி கிராமம், பெருங்கினறு தாலுக்கா, ஈரோடு

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary) - மாவட்டம்
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

திருமதி. சௌந்தரவள்ளி. தாசில்தார். கடவூர் தாலுக்கா. கரூர் மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant
குற்றமுறையிட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

தாமதம் இல்லை

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்) –

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு –

11. Inquest Report / Un-natural death Case No. if any :
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் –

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

கணவியின் தட்டச்சு செய்து தரப்பட்டுள்ளது

இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the investigation / Refused Investigation / Transferred to PS .....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லைக்கு உரிய புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
முத-அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு. அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

V. தேவி
23-7-25

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

23/7/25

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

23.07.2025 AT 08.15 HRS

Name: பெயர் க. சாமிநாதன்
Rank: நிலை .....No. எண் .....
காவல் ஆய்வாளர்
உ. நி. க. பிரிவு
ஆர்.

Attachment to Column 12 of FIR in Karur V&AC Cr.No.02/AC/2025 u/s 7(a) of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018.

பணிந்து சமர்பிக்கப்படுகிறது:

கரூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, காவல் ஆய்வாளர் K.சாமிநாதன் ஆகிய நான் 23.7.2025 ஆம் தேதி காலை சுமார் 07.00 மணிக்கு நிலைய அலுவலில் இருந்த போது V.ரேவதி, க/பெ.வேல்முருகன், 6/907, MPC நகர், திங்களூர், பெருந்துறை தாலுகா, ஈரோடு மாவட்டம் என்பவர் நிலையம் ஆஜராகி கணினியில் தட்டச்சு செய்த எழுத்துமூலமான புகாரினை கொடுத்தார். அந்த புகாரின் விபரம் பின்வருமாறு:- அனுப்புநர் - V.ரேவதி, க/பெ.வேல்முருகன், 6/907, MPC நகர், திங்களூர், பெருந்துறை தாலுகா, ஈரோடு மாவட்டம். பெறுநர் - காவல் ஆய்வாளர் அவர்கள், லஞ்ச ஒழிப்புத்துறை, கரூர் மாவட்டம். அய்யா, நான் தற்போது கணவர் மற்றும் குழந்தைகளுடன் ஈரோடு மாவட்டம் திங்களூர் கிராமத்தில் வசித்து வருகிறேன். நாங்கள் கூலிவேலை செய்து பிழைத்து வருகிறோம். எனக்கும் எனது கணவருக்கும் சொந்த ஊர் கரூர் மாவட்டம் கடவூர் தாலுகாவில் உள்ள வீரணம்பட்டி கிராமம் ஆகும். எனக்கு 3 மகளும், 1 மகனும் இருக்கிறார்கள். எனது கணவர் பார்வைத்திறன் குறைந்த மாற்றுத்திறனாளி ஆவார். எனது மூத்த மகள் பவித்ரா கடந்த 23.08.2007 அன்று கரூர் மாவட்டம் மயிலம்பட்டி அரசு மருத்துவமனையில் பிறந்தார். அவருக்கு கடந்த 10.09.2007ல் கரூர் மாவட்டம் தரகம்பட்டி ஊராட்சி அலுவலகத்தில் பிறப்பு சான்றிதழ் வாங்கினோம். அதில் எனது மகள் பெயர் பவித்ரா என்பதற்கு பதிலாக பௌத்ரா என்று பிழையுடன் சான்றிதழில் எழுதப்பட்டிருந்தது. எனது மகள் பவித்ரா தற்போது +2 படித்துவிட்டு கோபி VCR கல்லூரியில் B.Com., படிப்பில் சேர்ந்துள்ளார். அதற்கு பவித்ரா என்ற பெயரில் பிறப்புச்சான்று தேவைப்படுகிறது. அதனால் நான் எனது மகளின் பிறப்பு சான்றிதழில் உள்ள பெயரை பவித்ரா என்று திருத்தம் செய்து புதிதாக பிறப்புச்சான்றிதழ் வழங்கும்படி கேட்டு கடந்த 15.02.2024 ஆம் தேதி கடவூர் தாசில்தார் அவர்களிடம் எழுத்து மூலமாக மனு கொடுத்தேன். அத்துடன் எனது மகளின் பிறப்பு சான்றிதழ் ஆதார் கார்டு, குடும்ப அட்டை நகல் ஆகியவற்றை இணைத்து கொடுத்தேன். தொடர்ந்து நான் தாசில்தார் அலுவலகம் வந்து விசாரித்தேன். இந்நிலையில் கடந்த 17.07.2025-ஆம் தேதி வியாழக்கிழமை காலை சுமார் 11 மணிக்கு கீழப்பகுதி வி.ஏ.ஓ அன்புராஜ் அவர்களை அவரது அலுவலகத்தில் நேரில் சந்தித்து எனது மகளின் பிறப்பு சான்றிதழ் பிழைத்திருத்தம் பற்றி அவரிடம் கேட்டேன். அவர் தரகம்பட்டி தாசில்தார் அலுவலகத்தில் அவசரமாக மீட்டிங்கிற்கு செல்வதாகவும் அதனால் அடுத்த வாரம் செவ்வாய்கிழமையன்று வந்து பார்க்குமாறும் சொன்னார். ஆனால், நான் கடவூர் தாலுகா அலுவலகம் சென்று அங்கு பணியாற்றும் திரு.பழனிவேல் என்பவரிடம் கேட்ட போது அவர் தாசில்தார் கையெழுத்தில்லாத உத்தரவு நகல் ஒன்றை எனக்கு கொடுத்தார். அதில் கடந்த 04.09.2024 அன்று கடவூர் தாசில்தார் அவர்கள் எனது மகளின் பெயரை பவித்ரா என்று திருத்தம்

மேற்கொள்ள கீழப்பகுதி கிராம நிர்வாக அலுவலருக்கும் தாகம்பட்டி சார்பதிவாளருக்கும் கூறப்பட்டிருந்தது. ஆனால் சுமார் 10 மாதங்கள் ஆகியும் எனக்கு திருத்தம் செய்த பிறப்புச்சான்று கிடைக்கவில்லை. அதனால் நான் நேற்று 22.7.2025 ஆம் தேதி காலை சுமார் 11 மணிக்கு நான் கீழப்பகுதி வி.ஏ.ஓ அவர்களை நேரில் சந்தித்து, கடவூர் தாசில்தார் எனது மகளின் பிறப்புச் சான்றிதழில் பிழை திருத்தம் செய்யுமாறு அளித்த கையெழுத்து போடாத உத்தரவு நகலை அவரிடம் காண்பித்து, பிறப்புச் சான்றிதழ் திருத்தம் பற்றி கேட்ட போது அவர் என்னிடம் தாசில்தார் மேடத்தை பார்த்து ஒரிஜினல் உத்தரவில் சீல் வைத்து கையெழுத்து வாங்கி வரச்சொன்னார். நான் உடனே நேற்று 22.07.2025 மதியம் சுமார் 2¼ மணிக்கு கடவூர் தாசில்தார் அலுவலகத்திற்கு சென்றபோது அலுவலகத்திற்குள் யாரோ ஒருவர் சத்தம் தனக்குரிய சான்றிதழைக் கொடுக்கவில்லை என்று சத்தம் போட்டுகொண்டிருந்தார். அப்போது அங்கு வந்த மேடம் அந்த நபரை எச்சரித்து வெளியே அனுப்பிவைத்தார். பின்னர் அவர் என்னிடம் நான்தான் தாசில்தார் உனக்கு என்ன வேண்டும் என்று என்னிடம் கேட்டுக்கொண்டே அவரது அலுவலக அறைக்குள் சென்றார். நானும் அவருடன் உள்ளே சென்றேன். நான் அவரிடம் எனது மகள் பவித்ரா பெயரில் திருத்தம் செய்த பிறப்புச் சான்றிதழ் தருமாறு கீழப்பகுதி வி.ஏ.ஓ-விடம் கேட்டபோது அவர் உங்களிடம் ஒரிஜினல் உத்தரவில் சீல் வைத்து கையெழுத்து வாங்கி வரச் சொன்னார் என்று கூறி நான் கையில் வைத்திருந்த உத்தரவு நகலை அவரிடம் காண்பித்தேன். அவர் அதனை வாங்கி பார்த்துவிட்டு இது பழைய தாசில்தார் போட்ட உத்தரவு, நான் கையெழுத்து போட்டு புதியதாக பிழைத்திருத்த உத்தரவு வழங்க அவருக்கு தனியாக 5000/- ரூபாய் கொடுக்க வேண்டுமென என்னிடம் கேட்டார். நான் கடந்த ஒரு வருஷமா அலைந்து கொண்டிருக்கிறேன் என்றும், எனது கணவர் பார்வைத்திறன் குறைந்த மாற்றுத்திறனாளி என்றும், கூலி வேலைக்கு செல்வதால் அவ்வளவு தொகையை என்னால் புரட்ட முடியாது என்றும் அவரிடம் சொன்னேன். அதற்கு அவர் பணம் கொடுத்தால் தான் பிறப்புச் சான்றிதழில் பெயர் திருத்தம் செய்ய முடியும் இல்லை என்றால் எந்த வேலையும் நடக்காது என்றும், பணம் ரூ.5000/- கொண்டு வந்தால் உடனே பெயர் திருத்தம் செய்து பிறப்புச் சான்றிதழ் வாங்கிக் கொள்ளலாம் என்று தாசில்தார் மேடம் சொன்னார்கள். நான் அவரிடம் அவ்வளவு பணம் என்னிடம் இல்லை என்று சொன்னேன். அதற்கு எப்படியாவது பணம் ஏற்பாடு செய்து கொண்டுவா, இல்லையென்றால் உன் வேலை முடியாது என்று கண்டிப்பாக கூறி விட்டார். ஆனால் கூலி வேலை செய்யும் என்னால் ரூ.5000/- லஞ்சப்பணம் கொடுத்து எனது மகளின் பிறப்புச்சான்றிதழில் பிழைதிருத்தம் செய்து வாங்க விருப்பம் இல்லை. நான் வெளியே வந்து அங்கிருந்தவர்களிடம் விசாரித்தபோது என்னிடம் பணம் கேட்ட தாசில்தாரின் பெயர் திருமதி. சௌந்தரவள்ளி என்று சொன்னார்கள். எனது வறுமையையும் எனது கணவரின் இயலாமையையும் சொல்லியும்கூட என்னிடம் ரூ.5000/- லஞ்சம் கேட்கும் கடவூர் தாசில்தார் திருமதி.சௌந்தரவள்ளி அவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை

எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். இத்துடன் கடந்த 4.9.2024 ஆம் தேதியன்று கடவூர் வட்டாட்சியர் பிறப்பித்த உத்தரவு நகல் மற்றும் எனது மகள் பெயர் பௌத்ரா என்று பிழையாகவுள்ள பிறப்புச்சான்றிதழின் நகல் ஆகியவற்றை இணைத்துள்ளேன். மேலும் திருமதி. சௌந்தரவள்ளி அவர்கள் லஞ்சமாக கேட்ட பணம் ரூ.5000/- கொண்டு வந்துள்ளேன். உரிய நடவடிக்கை எடுக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு, Sd/- XXXXXXXXXX (V.ரேவதி) 23/07/2025.

Sir, Received the complaint on 23.07.2025 at about 07.00 hrs..A Confidential verification was conducted about the complaint through sources. The complaint was found to be true and the reputation of the accused was found to be bad. Hence, after getting oral permission from the DVAC, I am registering a case in Karur Vigilance and Anti-Corruption Cr.No.02/AC/2025 u/s 7(a) of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018 at 07.30 hrs on 23.07.2025. Sd/-(xxxxxxxx) 23.07.2025. K.Saminathan, Inspector of Police, V&AC, Karur.

Original FIR along with the original Computer typed complaint of Tmt.V.Revathi W/o.Velmurugan, 6/907, MPC Nagar, Thingalur Village, Perundurai Taluk, Erode District are submitted to the Hon'ble Principal District and Sessions Judge / Special Court, Karur and a copy of FIR will be submitted to the Director, Vigilance and Anti Corruption, Chennai.

23/7/25

(K.Saminathan)
Inspector of Police,
Vigilance and Anti-Corruption,
Karur.